**சுருக்கம்**

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – தமிழ்நாட்டில் நகர்புறப் பகுதிகள் (மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசுப் பள்ளிகளில் பயிலும் தொடக்கப்பள்ளி (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) மாணவ மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 2023–2024 ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்துதல்– அரசாணை வெளியிடப்பட்டது – திருத்தம் – வெளியிடப்படுகிறது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (நிலை) எண். 28

நாள். 27,03,2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
சோபகிருது ,பங்குனி 14

படிக்க:–

1, அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 07–06–2023,
2, அரசாணை (ப) எண்.94, நிதி (சந) துறை, நாள். 21–02–2024,
3, சமூக நல ஆணையரின் கடித ந.க.எண்.3652/சஉதி–2/2023, நாள். 27–03–2024.

------

ஆணை:–

தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகள் (மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் 31,008 அரசுப் பள்ளிகளில் பயிலும் 15,75,900 தொடக்கப்பள்ளி (1 முதல் 5–ஆம் வகுப்புவரை) மாணவ/மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2023–2024–ஆம் ஆண்டில் விரிவுபடுத்தி மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இன்னபிறவற்றுக்கிடையே 2023–2024–ஆம் நிதியாண்டில் செலவினம் ரூ.404,41,31,980–/ பின்வருமாறு ஒப்பளிப்பு செய்யப்பட்டது :–

| 1) <u>தொடர் செலவினம்</u> | |
|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | உணவூட்டுச் செலவினம் |
| 15,75,900 (1575900 x ரூ.12.71/– நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு x 170 நாட்கள்) (15 ஜுலை 2023 முதல் மார்ச் 2024 வரை) | ரூ.340,50,47,130 |

| | |
|---|---|
| 2) தொடராச் செலவினம் | |
| அ. சமையல் உபகரணங்கள் | ரூ.43,38,00,000 |
| ஆ.எரிவாயு இணைப்பு (வைப்புத் தொகையுடன்) (ரூ.7325x27,258) | ரூ.19,96,64,850 |
| இ. பதிவேடுகள் | ரூ.31,20,000 |
| ஈ.நிர்வாக மற்றும் மதிப்பீட்டுச் செலவினம் | ரூ.25,00,000 |
| தொடராச் செலவினம் | ரூ.63,90,84,850 |
| மொத்த செலவினம் (தொடர் மற்றும் தொடரா செலவினம்) | ரூ.404,41,31,980 |

2. மேலே ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது:-

"2236-சத்துணவு 02-சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102-மதிய உணவு- மாநிலச் செலவினங்கள் BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்துப் பள்ளி நாட்களிலும் அரசுத் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலைச் சிற்றுண்டி வழங்குதல் 309 - உதவித்தொகை -03- குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
(IFHRMS த.தொ.கு: 2236 02 102 BG 30903) "

3. தற்பொழுது 2023-2024 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2023-2024-ஆம் ஆண்டில் நிர்வாக மற்றும் மதிப்பீட்டுச் செலவினத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட ரூ.25,00,000/- ஆனது "த.தொ.கு: 2236 02 102 BG 33303" கணக்கு தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, எனவே மூன்றாவதாக படிக்கப்பட்ட சமூக நல ஆணையரின் கருத்துருவில் மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணைக்கு உரிய திருத்தம் வெளியிடுமாறு அரசினை வேண்டியுள்ளார்.

4. சமூக நல ஆணையரின் கருத்துருவினை ஏற்று மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நிர்வாக மற்றும் மதிப்பீட்டுச் செலவினத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட ரூ.25,00,000/-யினை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது:-

"2236-சத்துணவு 02-சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102-மதிய உணவு- மாநிலச் செலவினங்கள் BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்துப் பள்ளி நாட்களிலும் அரசுத் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலைச் சிற்றுண்டி வழங்குதல் - 333 தொழில்முறை சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் -03- சிறப்புப் பணி.
(IFHRMS த.தொ.கு: 2236 02 102 BG 33303) "

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.31/DS(SA)/2024 , நாள்.27.03.2024–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்,
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,சென்னை–3.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
சமூக நல ஆணையர்,சென்னை–5.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை.6.
சிறப்பு அலுவலர், இல்லம் தேடிக் கல்வி மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், சென்னை.6.
மின் ஆளுமை இயக்குநர், சென்னை.2.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை–I/II),சென்னை–18.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை–9.

அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை.9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்